விநாயகர் பதின்ம மேல்நிலைப்பள்ளி, சிவகாசி

வகுப்பு : 12 பாடம் : தமிழ்

DATE: 2 – October – 2021 T – 44 No. of Pages : 03

# தேயிலைத் தோட்டப் பாட்டு

_முகமது இராவுத்தர்

## முன்னுரை :

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தினாலும் வெள்ளையர் வஞ்சத்தினாலும் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் கரும்புத் தோட்டத் தொழிலாளர்களாகவும் தேயிலைத் தோட்ட கூலிகளாகவும் புலம்பெயர்ந்தனர். துன்பக் கேணியில் அகப்பட்டவராயினர். விளிம்பு நிலை வாழ்வு துயரம் தோய்ந்தது. அவர் விம்மி விம்மி அழுத குரலைக் காற்று கேட்டிருக்கலாம். தஞ்சமுமில்லாத அவர்கள் நிலையை பாரதி பாடினார். வெகு சனங்களிடையே கும்மிப்பாடல்களாக ஆக வந்த இத்தகைய சிறு நூல்கள் இத் துயரத்தைப் பேசின.

## ஆசிரியர் குறிப்பு :

முகம்மது இராவுத்தர் எழுதிய கும்மி பாடல்கள் 'பாரத மக்களின் பரிதாபச் சிந்து' என்ற தேயிலைத் தோட்டப்பாட்டு நூலில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. 19ஆம் நூற்றாண்டு இறுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சிறு சிறு நூல்களாக மெல்லிய தாளில் பெரிய எழுத்தில் வெளியாயின.

## பாடல் வரிகள் :

ஆதியி லேநமது இந்திய. தேசத்தில்
ஆன பலவிதக் கைத்தொழில்கள் - மிக
சாதன. மாகவே ஓங்கிக் குடிகொண்டு
சாலச் சிறப்புடனே திகழ்ந்தே
நாகரீ கத்திலும் ராஜரீ கத்திலும்
நாடெங்கும்என்னாலும்கொண்டாடி- அருஞ்
சேகரம் போலச் சிறந்து விளங்கிடும்
செல்வம் மலிந்த திருநாடு
இத்தகையச் சீரும் சிறப்பும் கொண்ட நம
திந்திய தேசத்தில் அன்னியர்கள் – நடு
மத்தியில் வந்துகுடி புகுந்து வரு
மானங் கொடுத்து ரட்சித்துவரும்
கைத்தொழில்யாவையுங்கொஞ்சங்கொஞ்சமாகக்
காத் திருந்து சமயம் பார்த்து-உள்ள
அத்தனையுங் கொள்ளை யிட்டுக்கொண்டு நம்மை
அற்பப் பிராணி போற் செய்ததினால்

உண்டு பிறந்து வளர்ந்த இடங்களில்
உற்ற பலவித வேலை செய்து - நாம்
பெண்டுபிள்ளையுடன்கஷ்டப்பட்டுத்தினம்
பேயினும் நாயினும் கீழாகினம்
வேலைக்கு வாரீரோ என்று சொல்லிப்பல
வித்தார மாகவே நோட்டீ ஸொட்டி நம்மை
சூலை கரும்புபோ காட்டிக் குரங்காட்டும்
அந்தக் கங்காணிகள் கூப் பிடவே
ஒன்றுக்குப் பத்துநூறா யிரமா கவே
ஒவ்வொரு கூலி ஜனங்கள் மீதும்-மிகத்
தண்டு முண்டுமாய்க் கணக் கெழுதியவர்
சாகும் வரைக்குந் தலைச் சுமையாய்
பற்று வரவு குறிப்புப் பேரேட்டி னிற்
பாக்கி யிருக்கும்படி யெழுதி - அவர்
சற்றுந் தயவு மில்லாமலே கூலி
ஜனங்களைக் கப்ப லிலே யேற்றி
அக்கரைதேசத்தின் லங்கைத்தீவுக்குள்ளே
அந்தமான் தீவு போன்ற இடத்தில்- மிகச்
சிக்கன மாகவே வெள்ளையர் தங்களின்
தேயிலைத் தோட்டத்திற் சேர்த்திடுவார்
உண்ண வுணவுக்கு முள்ள செலவுக்கும்
ஒவ்வொரு நாளும் அரிதாகி - சிறு
மண்ணுளிப் பாம்புபோற் பெண்டுபிள்ளையுடன்
வாழ்ந்து வருவதைக் காணீரோ
ஆதலாலே யினியிந்த சகோதர
அன்புள்ள சகோதரி காளினிமேல்-இந்தப்
பூததயை யில்லாக் கங்காணிகள்செப்பும்
பொய்யுரை கண்டு மயங்காதீர்
இப்படிச் சென்றந்தத் தேயிலைத் தோட்டத்தில்
இந்தியர் துன்பப் படுவதற்கு - மன
தொப்பிய கல்வியொழுக்கம் நாகரீகம்
ஒன்றேனு மில்லாக் குறையெனவே
இன்றேனுங் கண்டுங்கள் பிள்ளைகளுக் கெல்லாம்
ஏற்றமுள்ள கல்வியைப் புகட்டி - நீங்கள்
ஒன்றுங் குறையில்லா ஒற்றுமையாகவே
ஊரிற் கட்டுப்பாடு செய்குவீரே.

**பாடல் விளக்கம்:**

பழங்காலத்தில் நம் தேசத்தில் பலவித கைத்தொழில்கள் சிறப்புப் பெற்று விளங்கியது. நாகரீகத்திலும் ராஜரீகத்திலும் நாடெங்கும் எந்நாளும் கொண்டாடினர். இத்தகு சீரும் சிறப்பும் கொண்ட நம் தேசத்தில் அன்னியர்கள் புகுந்தனர்.நம் பண்பாட்டையும், நாகரிகத்தையும் கைத்தொழிலையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கொள்ளை அடித்து நம்மை அற்ப பிராணி போல் செய்தனர். உண்டு பிறந்து வளர்ந்த இடங்களில் பலவேலை செய்த நாம் இன்று மனைவி குழந்தைகளோடு நாயினும் கீழாகினோம்.

**கங்காணியின் செயல்:**

விளம்பர சுவரொட்டி ஒட்டி வேலைக்கு அழைத்தனர். ஆலைக் கரும்பு போல நம் உழைப்பைப் பிழிந்தும் குரங்கைப் போல் நம்மை ஆட்டிப் படைத்தும் ஒன்றுக்குப் பத்தாகப் பொய் கணக்கெழுதினர். தயவு ஏதுமில்லாமல் கூலித் தொழிலாளிகளைக் கப்பலில் ஏற்றி இலங்கை, அந்தமான் தீவுக்குக் கொண்டு சென்றனர். உண்ண உணவுக்கும், கைப்பிடிச் செலவுக்கும் துன்பப்பட்டு மண்ணுளிப் பாம்புப் போல மனைவி மக்களோடு வாழ்ந்தனர். சகோதர, சகோதரிகளே கண்காணிப்பவர் கூறும் பொய்யுரைகளை கண்டு மயங்காதீர்.

**முடிவுரை:**

வறுமை, பினி, ஏமாற்றம் போன்றவை எளிய மக்களின் வாழ்க்கை வழிகளை பிரதிபலிக்கின்றன. இப்படியே இவர்கள் கூலித்தொழிலாளியாய்த் தேயிலைத் தோட்டத்தில் (இந்தியர்) நாம் துன்பப்படுவதற்குக் கல்வி, ஒழுக்கம், நாகரிகம் இல்லாத குறையே. இன்றே உணருங்கள். நம் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைக் கற்றுக் கொடுத்து, குறையில்லாமல் ஒற்றுமையாய் ஊரில் கட்டுப்பாட்டோடு வாழ்வோம்.